# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.76/2022 | Date | : 18.07.2023 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : திருச்செங்கோடு |
| Name | : செல்வகுமார் | Calling | : போர்வெல் தொழில் |
| Father / Husband Name | : கணேசன் | Religion | : இந்து |
| Village | : மண்ணாடிபாளையம் | Age | : 50 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.07.2023.

(1, 4, 5-ம் எதிரிகள் ஆஜர். 2, 3-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3-ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் திருச்செங்கோடு வட்டம் மண்ணடிபாளையத்தில் குடியிருந்து போர்வெல் தொழில் செய்து வருகிறேன். கடந்த 26.08.2021-ம் தேதி என்னுடைய உதவியாளர் சுய்க்குமார் யாதவ் போர்வெல்லில் வேலை செய்வதற்கு ஏஜெண்டுகள் சொல்லி ஆட்கள் இருப்பதாக என்னிடம் கூறினார். இரவு சுமார் 08.15 மணியளவில் என்னுடைய பொலிரோ வாகனத்தை எடுத்துக்கொண்டு சுய்க்குமார் யாதவுடன் சங்ககிரி ஆர்.எஸ். வழியாக வைகுந்தம் டோல்கெட் வரை சென்றோம். அங்கு சென்று பார்த்தபோது அங்கு ஆட்கள் யாரும் இல்லை. பின்னர் நேரம் சரியாக எனக்கு ஞாபகமில்லை இரவு சுமார் 08.45 மணிக்கு மேலிருக்கும் நானும் சுய்க்குமார் யாதவும் புறப்பட்டு வீட்டிற்கு வருவதற்காக வந்தோம். காலையிலிருந்து வேலை செய்யததால் டயர்டாக இருந்தது அதனால் சங்ககிரி ஆர்.எஸ். அருகே வந்து அங்கிருக்கும் ஒரு பேக்கரியில் டீ குடிப்பதற்காக என்னுடைய வாகனத்தை நிறுத்தினேன். அப்போது கடை மூடப்பட்டிருந்தது. பின்னர் டயர்டாக இருந்ததால் கததை இறக்கி வைத்துவிட்டு அந்த இடத்திலேயே காரிலேயே தூங்கிவிட்டோம்.

2) பின்னர் விசாரித்து பெயர் தெரிந்துகொண்ட ராஜாமணி என்பவர் அங்கு சுமார் 10 நபர்களுடன் வந்து என் காரை சுமார் 5 நபர்கள் சூழ்ந்துகொண்டனர். ராஜாமணி என்பவர் என்னை பார்த்து யாருடா கண்டார ஓலி பையா, தேவிடியா பையா வண்டியை விட்டு இறங்குடா என்று கூறினார். ராஜாமணி என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். (சாட்சி ராஜாமணியை பார்த்து அடையாளம் காட்டினார்.).

3) பின்னர் பின்னால் அமர்ந்திருந்த சுய்க்குமார் யாதவின் கன்னத்தில் ராஜாமணி அடித்து ரத்த காயத்தை ஏற்படுத்தினார். நான் ஏன் சுய்க்குமார் யாதவை அடிக்கிறீர்கள் என்று கேட்டுக்கொண்டே காரிலிருந்து இறங்கினேன். பின்னர் செல்லமுத்து என்பவர் என்னை கண்டார ஓலி பையா, தேவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் திட்டி எங்களுடைய ஆளை விட்டுவிடுங்கள் அவர்களை எங்கே வைத்திருக்கிறாய் என்று கூறி என்னுடைய இடது கண் புருவத்தில் அடித்தார். தற்போது அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும் ஆனால் தற்போது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனக்கு ரத்த காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது.

4) பிறகு ஜெகநாதன் என்பவர் என்னை கீழே தள்ளி காலால் எட்டி உதைத்தார். தற்போது அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும் ஆனால் தற்போது அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. சண்முகம் என்பவரும் கண்டார ஓலி பையா, தேவிடியா பையா என்று கெட்ட வார்த்தையால் திட்டி என்னையும் சுய்க்குமார் யாதவையும் எட்டி உதைத்தார். சண்முகம் என்பவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். (சாட்சி சண்முகத்தை பார்த்து அடையாளம் காட்டினார்.) என்னை கீழே தள்ளும்போது என்னுடைய செல்போன் கீழே விழுந்துவிட்டது. ராஜாமணியின் மகன் என்னுடைய செல்போனை எடுத்து கீழே போட்டு உடைத்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் செல்போன் என்னுடையது தான். அந்த செல்போனைதான் ராஜாமணியின் மகன் கீழே போட்டு உடைத்தார் (**டிஸ்பிளே உடைந்த நிலையிலிலுள்ள ரெட்மி செல்போன் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

**5)** தற்போது என்னிடம் காட்டப்படும் பில் தான் நான் வாங்கிய செல்போனிற்கான பில் என்றால் இல்லை அது சங்கீதா மொபைல்சில் வாங்கிய பில். என்னையும் சுய்க்குமார் யாதவையும் பொலிரோவில் தூக்கி போட்டுக்கொண்டு டோல்கேட் அருகேயுள்ள வாழக்குட்டை என்ற இடத்திலுள்ள ராஜாமணி என்பவரின் தோட்டத்திற்கு எங்களை கொண்டுசென்று எங்களை கீழே இறங்கச் சொன்னார்கள். சண்முகம் என்பவர் என்னை ரயில்வே டிராக்கில் வைத்து கொன்றுவிடுவதாகவும் மிரட்டினார். ஆட்களை கொண்டுவந்து விடுவதற்காக என்னை மிரட்டினார். அங்கிருந்த 5 பேரும் எங்களை உதைத்து கிணத்து மோட்டார் ரூமிற்கு கொண்டு சென்று இரவு சுமார் 11.30 மணியளவில் எங்களை அடைத்து வைத்தனர். தண்ணீர் தாகம் என்று கேட்டும் எதிரிகள் தண்ணீர் தர மறுத்துவிட்டனர். காலை சுமார் 06.00 மணியளவில் நான் தண்ணீர் தண்ணீர் என சத்தம் போட்டேன் யாரோ ஒருவர் தண்ணீர் வந்து கொடுத்தார். பின்னர் எனக்கு சரியாக நேரம் ஞாபகமில்லை.

6) பின்னர் என்னுடைய அக்காவின் கணவர் சந்திரசேகர் மற்றும் உறவினர்கள் பாலசுப்பிரமணியும், ரமேசும் எதிரிகளுடன் பேசினர். பின்னர் என்னை சங்ககிரி காவல் நிலையம் அழைத்து சென்றனர். பின்னர் திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்துக் கொண்டு சேர்த்தனர். திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சிகிசிசையிலிருந்தபோது போலீசார் இது சம்பந்தமாக விசாரித்து வாக்குமூலம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான் (**புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் தரப்பிற்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.07.18 14:41:41 +0530

Sd /- Selvakumar

Judicial Magistrate No.1,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.76/2022 | Date | : 18.07.2023 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : திருச்செங்கோடு |
| Name | : சந்திரசேகர் | Calling | : போர்வெல் |
| Father / Husband Name | : ராமசாமி | Religion | : இந்து |
| Village | : கிளாப்பாளையம் | Age | : 60 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.07.2023.

(1, 4, 5-ம் எதிரிகள் ஆஜர். 2, 3-ம் எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3-ம் எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் திருச்செங்கோடு வட்டம் கிளாப்பாளையத்தில் குடியிருந்து போர்வெல் வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய செல்வகுமார் என்பவர் என்னுடைய மைத்துனர் ஆவார். ஆஜர் எதிரிகள் மூன்று பேரையும் பிரச்சனை நடந்த தினத்தன்று நான் பார்த்தேன். கடந்த 27.08.2021-ம் தேதி காலை சுமார் 04.00 மணியளவில் செல்வகுமாரின் மனைவி அனிதா என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு செல்வகுமார் இரவில் செல்வகுமாரும் அவருடைய உதவியாளரும் சென்றதாகவும், ஆனால் அவர் வீட்டிற்கு திரும்பவில்லை என்றும் கூறினார்.

2) பின்னர் நானும் செல்வகுமாரை தொடர்பு கொண்டபோது அவருடை போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. அவருடைய உதவியாளரின் போன் ரிங் ஆகி அவர் அதை எடுக்கவில்லை. பின்னர் உதவியாளரின் போனை ஒருவர் எடுத்துக்கொண்டு என்னை சங்ககிரி வரச் சொன்னார். நான் தனியாக சென்றால் சரியாக வராது என்று நினைத்து என்னுடன் பாலசுப்பிரமணி மற்றும் ரமேஷ்

ஆகியோரை அழைத்துக்கொண்டு சங்ககிரி சென்றேன். சங்ககிரி வந்து மறுபடியும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்கள் என்னை டோல்கேட்டுக்கு வரச் சொன்னார்கள். பின்னர் வலதுபுறம் சாலையில் வந்து வாழக்குட்டை என்ற ஊருக்கு எங்களை வரச் சொன்னார்கள். அங்கு சென்றுபார்த்தபோது செல்வகுமாரை அடித்து ரத்த காயத்துடன் கிணத்து மேட்டில் உட்கார வைத்திருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது ராஜாமணியின் கோஷ்டியின் ஆட்களை காணவில்லை என்றும், 1-1/2 லட்சம் ரூபாய் கொடுத்து செல்வகுமாரையும், அவருடைய உதவியாளரையும் அழைத்துச் செல்லுமாறு கூறினார்கள். பின்னர் பேசிக்கொள்ளலாம் என்று கூறி செல்வகுமாரை திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்த சிகிச்சையில் சேர்த்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் எத்தனை வருடமாக போர் போடும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சுமார் 10 வருடமாக செய்து வருகிறேன். மேற்படி தொழிலில் வேலை ஆட்களுக்கு முன்பணம் கொடுப்பது வழக்கம் என்றால் ஒரு சிலர் கொடுப்பார்கள். நான் சென்றபோது அ.சா.1 கிணத்து மேட்டில் உட்கார்ந்திருந்ததாக தான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மண்சாலையிலிருந்து கிணத்துமேடு எந்த திசையில் உள்ளது என்றால் சரியாக தெரியாது. அங்கு என்ன பயிரிடப்பட்டிருந்தது என்றால் தெரியாது. நான் உண்மையில் அங்கு சென்றிருந்தால் மேற்கண்ட விபரங்கள் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. எதிரிகளின் வேலை ஆட்களை எதிரிகளின் அனுமதி இல்லாமல் அ.சா.1 செல்வகுமார் வேலைக்கு அழைத்து சென்றதுதான் விரோதத்திற்கு காரணம் என்றும், செல்வகுமாரை யாரும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் அ.சா.1-ன் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2023.07.18 14:41:53
+0530

Sd /- Chandirasekar

Judicial Magistrate No.1,
Sankari.